අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/02/29/02/02/06- i

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.10.13

**கல்வி சுற்றறிக்கை இலக்கம் - 31/2023**

சகல மாகாண முதன்மை செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

**<u>புதிய ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பை அமுல்படுத்துதல்</u>**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 8 ஆம் வாசகத்தின் மூலமாக ஆசிரியர்களின் வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்வது தொடர்பில் காட்டப்பட்டுள்ளதுடன், 15 ஆம் வாசகத்தின் மூலம் இடைக்கால ஏற்பாடுகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பை வெளியிட்ட பின்னர் பல சந்தர்ப்பங்களில் இந்த இடைக்கால ஏற்பாடுகளை நீடித்தல் மற்றும் ஏனைய விதிமுறைகள் தொடர்பாக சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனை கடிதங்கள் வழங்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இது குறித்து ஆலோசனைகளை வினவுவதால் அவை குறித்தான பின்வரும் விடயங்கள் உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

**1. இடைக்கால விதிமுறைகளை நீடித்தல்**

1.1. இலக்கம் 1885/38 மற்றும் 2014.10.23 ஆம் திகதிய ஆசிரிய பிரமாணக்குறிப்பின் 15 ஆம் வாசகத்தின் மூலமாக 03 வருடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள இடைக்கால விதிமுறைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி பிரகாரம் எனது இலக்கம் ED/02/29/02/02/06 மற்றும் 2018.04.09 ஆம் திகதிய கடிதம் மூலமாக மூன்று (3) வருடங்கள் முதல் ஐந்து (05) வருடங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1.2. இந்த கடிதத்திற்கு மேலதிகமாக வெளியிடப்பட்ட இலக்கம் ED/02/29/02/02/06 மற்றும் 2020.05.18, 2020.12.09 மற்றும் 2021.10.22 ஆம் திகதிய கடிதங்கள் மூலமாக இடைக்கால விதிமுறைகள் 2022.10.22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**2. ஆசிரிய சேவையில் பதவியுயர்வுகளை வழங்குதல்**

2.1. இடைக்கால ஏற்பாடுகளை நீடிக்கும் விதிமுறைகளின் பிரகாரம் ஆசிரிய சேவையில் பதவியுயர்வுகளை வழங்கும்போது பின்வருமாறு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இறுதியாக என்னால் வெளியிடப்பட்ட இலக்கம் ED/02/29/02/02/06(i) மற்றும் 2021.11.09 ஆம் திகதிய கடிதம் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

I. 2019.10.22 ஆம் திகதி வரை பதவியுயர்வு திகதிகளைக் கொண்ட இலங்கை ஆசிரிய சேவையின் அனைத்து ஆசிரியர்களுக்கும் சேவைக்காலம் மற்றும் ஏனைய தேவைகளைத் தவிர தொழில் மீளாய்வு மற்றும் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யும் தேவையில் இருந்து விடுப்பட்டுள்ளதாக கருதி


guruwaraya.lk

ஆசிரிய சேவை தரமுயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

II. 2019.10.23 ஆம் திகதி தொடக்கம் 2022.10.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவியுயர்வு தினத்தைக்கொண்ட ஆசிரியர்களுக்கு அடுத்த பதவியுயர்வுக்கு முன் பயிற்சி (மொடியுலை) பூர்த்தி செய்யும் நிபந்தனையின் கீழ் உரிய பதவியுயர்வுகள் வழங்கப்பட வேண்டும். அந்த நிபந்தனையின் கீழ் பதவியுயர்வு பெறும் ஆசிரியர்கள் பதவியுயர்வு பெறும் தரத்திற்குரிய வினைத்திறன் தடைதாண்டல் மற்றும் அந்த பதவியுயர்வினை பெறுவதற்கு முன்னால் இருந்த தரத்திற்குரிய வினைத்திறன் தடைதாண்டல் போன்ற இரண்டு தடைதாண்டல்களையும் அடுத்த பதவியுயர்வுக்கு முன்னால் பூர்த்தி செய்ய வேண்டும்.

III. எனினும் 2022.10.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு அதற்குமேல் உயர்வான தரம் ஒன்று இல்லாதபடியால் அந்த ஆசிரியர்கள் வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

IV. இடைக்கால விதிமுறைகள் நிறைவுபெறும் 2022.10.22 ஆம் திகதிக்கு பின்னர் பதவியுயர்வுகளைக் கொண்ட அனைத்து ஆசிரியர்களும் ஆசிரிய சேவை பதவியுயர்வு தொடர்பாக சேவை பிரமாணக்குறிப்பில் காணப்படும் அதற்குரிய அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## 3. வினைத்திறன் தடைதாண்டல் தொடர்பில் ஆசிரியர்களை ஈடுபடுத்தல்

3.1. ஆசிரிய பிரமாணக்குறிப்பில் 15 ஆம் வாசகத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதற்கமைய இந்த இடைக்கால விதிமுறைகள், தரயுயர்வுகளை வழங்கும் செயற்பாட்டிறகு பொருந்துவதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்களை பதவியுயர்வு திகதிகளின் அடிப்படையில் வழங்குவது மிகவும் விரும்பத்தக்கதாக இருப்பினும், வினைத்திறன் தடைதாண்டல் தளர்வு குறித்து எனது இலக்கம் ED/02/29/02/02/06 மற்றும் 2018.05.24 மற்றும் 2021.05.19 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் ஆசிரியர் நியமனத்திகதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யவேண்டிய குழுக்களுக்கு அதில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை என்ற தகவல்கள் எனக்கு கிடைத்துள்ளன.

3.2. அந்த கடிதங்களை வழங்கும்போது, ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பில் 08 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்யவேண்டியது, குறிப்பிட்ட தரத்திற்கு எத்தனை வருடங்களுக்கு முன் நியமனம் பெற்ற காலத்தை மட்டும் கருத்திற்கொண்டு நாட்களை கணக்கிட்டு அதன் பிரகாரம் நியமனத் திகதிகளை வெளியிட்டுள்ளதுடன், ஆசிரிய சேவையில் பல்வேறு தரங்களுக்குரியவாறு பதவியுயர்வு தினங்கள் மாறுபடுவதால் குறிப்பிட்ட காலத்திற்குள் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யும் முறைமையொன்று இல்லாததால் ஒரு குறிப்பிட்ட குழுக்களுக்கு இவ்வாறு வினைத்திறன் தடைதாணடல் பூர்த்தி செய்யும் வாய்ப்பு தவறவிடப்பட்டதை நான் மேலும் அவதானிக்கின்றேன்.

3.3. எவ்வாறாயினும் அனைத்து ஆசிரியர்களின் பதவியுயர்வு வழங்கும் செயற்பாடுகள் மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

guruwaraya.lk

3.4. மேலும் ஆசிரியர்களின் வினைத்திறன் தடைதாண்டல் (மொடியுல்) தொடர்பாக ஆசிரியர்களை ஈடுபடுத்திக்கொள்வது தற்போது ஆசிரிய நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுவதால் குறிப்பிட்ட காலப்பகுதிற்குரியவாறு மொடியுலை பூர்த்தி செய்யவேண்டிய ஆசிரியர்களை அடையாளம் காண முடியாத நிலை தோன்றியுள்ளதாக ஆசிரிய நிலைய முகாமையாளர்கள் எமக்கு அறிவித்துள்ளார்கள்

3.5. எனவே குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வினைத்திறன் தடைதாண்டலை பூர்த்தி செய்யவேண்டிய ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளின் பணிகளை மேற்கொள்ளப்படும் வலயக்கல்வி அலுவலகங்களினால் உரிய ஆசிரிய அபிவிருத்தி நிலையங்களுக்கு முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அறியத்தருகின்றேன்.

3.6. அத்துடன் கிழமை நாட்களில் நடைபெறும் மொடியுல் செயற்றிட்டங்களில் பங்கேற்கும் ஆசிரியர்கள் தொடர்பாக பாடசாலை செயல்பாடுகளுக்கு தடை ஏற்படாதவாறு கடமை விடுப்புகளை வழங்குமாறு மேலும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

## 4. தகுதிகான் கால முடிவில் சேவையை நிரந்தரமாக்குதல்

4.1. 03 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள போதிலும் இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் படி பூர்த்தி செய்யவேண்டிய வினைத்திறன் தடைதாண்டல் முழுமைப்படுத்தப்படாத காரணத்தால் பதவியில் நிரந்தரமாக்கப்படாத ஆசிரியர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை கருத்திற்கொண்டு அது தொடர்பான முன்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதம் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் எனது சம இலக்கம் மற்றும் 2022.01.24 ஆம் திகதிய கடிதம் மூலமாக வினவப்பட்டது.

4.2. அதற்குரியவாறு எனக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/EST/02-05/03/2020 மற்றும் 2022.04.25 ஆம் திகதிய கடிதத்தின்படி 03 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ள போதிலும் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் நிரந்தரமாக்கப்படாத ஆசிரியர்களை தனிப்பட்ட குழுக்களாக அடையாளம் கண்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி மீதமுள்ள பயிற்சி மொடியுல்களை விரைவில் நடத்துவதற்கு செயல்படுமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் கட்டளை பிறபித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

4.3. அது தொடர்பாக தாங்கள் விசேட கவனம் செலுத்தி உரிய பயிற்சி வேலைத்திட்டங்களை விரைவில் நடத்துவதற்கும் நிரந்தமாக்குவதற்கும் உள்ள ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கி தேவையான முன்நடவடிக்கைகளை தாமதமின்றி நிறைவேற்றும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

## 5. தொழில் மீளாய்வுகளை நடைமுறைப்படுத்துதல்

5.1. ஆசிரிய சேவையில் பதவியுயர்வுகள் தொடர்பான இடைக்கால விதிமுறைகள் 2022.10.22 உடன் முடிவடைந்துள்ளதுடன், அத்திகதிக்கு பின்னர் ஆசிரிய சேவையின் பதவியுயர்வுகளை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளின் படி தொழில் மீளாய்வு மற்றும் வினைத்திறன் தடைதாண்டல் பூர்த்தி செய்யப்படுவது கட்டாயமாகும்.

5.2. மேலும் ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் 11.2.3. (இ) இல் ''தொழில் மீளாய்வு தொடர்பாக பயன்படுத்தப்படும் அறிக்கைகள் மற்றும் குறிப்புகள் போன்றவற்றுக்குரிய மாதிரி படிவங்களை பூர்த்திசெய்யும் ஆலோசனைகள் உட்பட தொழில் மீளாய்வை நடத்தும் முறை குறித்த ஆலோசனைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின்

guruwaraya.lk

ஒப்புதலுடன் நிரல் அமைச்சின் செயலாளரினால் தேவைக்கேற்ப அவ்வப்போது வெளியிடப்படுவதாக'' குறிப்பிடப்பட்டுள்ளது.

5.3. அதன் பிரகாரம், வரைவு செய்யப்பட்ட தொழில் மீளாய்வு திட்டத்திற்கான அனுமதியினை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வனுமதி கிடைத்தவுடன் அதை ஒரு சுற்றறிக்கையாக தங்களுக்கு வழங்கப்படும்.

இந்த சுற்றறிக்கையின் விதிமுறைகள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் நிலவுமெனில் அது குறித்து எதிர்காலத்தில் தங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ஒப்பம் – எம்.என். ரணசிங்க
செயலாளர்

பிரதிகள் :

| | | | |
|---|---|---|---|
| (1) | செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு | - | த.அ.கோ |
| (2) | தாபன பணிப்பாளர் நாயகம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - | த.அ.கோ. |
| (3) | பிரதான ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்வி அமைச்சு | - | த.தே.ந.எ. |
| (4) | கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி நிர்வாகம்), கல்வி அமைச்சு | - | த.தே.ந.எ. |

guruwaraya.lk

guruwaraya.lk